பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி-சென்னை-4

17.08.2025 7 15

ஞாயிற்றுக்கிழமை காலை

தலைப்புச் செய்திகள்

1. பிரதமர் நரேந்திர மோடி, 11 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பில் நிறைவுற்ற இரண்டு தேசிய நெடுஞ்சாலைத் திட்டங்களைத் புதுதில்லியில் இன்று தொடங்கி வைக்கிறார்.

2. வெளியுறவுத்துறை செயலர் திரு. விக்ரம் மிஸ்ரி இரண்டு நாள் அரசுமுறைப் பயணமாக இன்று நேபாளம் செல்கிறார்.

3. பிஜேபி நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுக் கூட்டம் புதுதில்லியில் இன்று நடைபெறுகிறது.

4. தெலங்கானா, மகாராஷ்டிரா, குஜராத், கோவா மாநிலங்களின் ஒருசில பகுதிகளில் அதிகனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

5. அமெரிக்கா சர்வதேச சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ஸ்ரீராம் பாலாஜி - ரித்விக் இணை இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

பிரதமர் நரேந்திர மோடி, 11 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பில் நிறைவடைந்த இரண்டு தேசிய நெடுஞ்சாலைத் திட்டங்களைத் புதுதில்லியில் இன்று தொடங்கி வைத்து உரையாற்றுகிறார்.

இது தொடர்பாக சமூக வலைதளத்தில் பிரதமர் வெளியிட்டுள்ள பதிவில் தேசிய தலைநகரைச் சுற்றியுள்ள பகுதிகளில் உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதில் மத்திய அரசு உறுதியுடன் உள்ளது என்று தெரிவித்துள்ளார்.

இதன் மூலம் அப்பகுதியில் வசிக்கும் மக்களின் வாழ்வாதாரம் மேம்படும் என்றும், போக்குவரத்து நெரிசலைக் குறைக்கும் வகையில் திட்டங்கள் வடிவமைக்கப்பட்டுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

மேலும் இந்த நெடுஞ்சாலைத் திட்டங்கள் போக்குவரத்துக்கான இணைப்பை கணிசமாக மேம்படுதுவதன், பயண நேரத்தை கணிசமாகக் குறைக்கும் என்றும், பிரதமர் அலுவலகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

வெளியுறவு அமைச்சர் டாக்டர் எஸ் ஜெய்சங்கருடன், பிரிட்டன் வெளியுறவு அமைச்சர் டேவிட் லாம்மி தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசினார்.

இது தொடர்பாக சமூக வலைதளத்தில் டாக்டர் ஜெய்சங்கர் வெளியிட்டுள்ள பதிவில், ரஷ்யா - யுக்ரைன் இடையே அண்மையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் மற்றும் இதர சர்வதேச விவகாரங்கள் குறித்து விவாதித்ததாக தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

பிஜெபி நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுக் கூட்டம் இன்று புதுதில்லியில் உள்ள அக்கட்சியின் தலைமையகத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் குடியரசுத்துணைத் தலைவர் தேர்தலுக்கான வேட்பாளர் குறித்து இறுதி செய்யப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

குடியரசுத் துணைத் தலைவர் தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் செய்ய இம்மாதம் 21 - ம் தேதி கடைசி நாளாகும்.

போட்டி இருக்கும் நிலையில், அடுத்த மாதம் 9 ஆம் தேதி தேர்தல் நடைபெறும்.

<<<<>>>>

பிரதமர் நரேந்திர மோடி, 11 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான இரண்டு தேசிய நெடுஞ்சாலைத் திட்டங்களைத் புதுதில்லியில் இன்று தொடங்கி வைத்து உரையாற்றுகிறார்.

இது தொடர்பாக சமூக வலைதளத்தில் பிரதமர் வெளியிட்டுள்ள பதிவில் தேசிய தலைநகரைச் சுற்றியுள்ள பகுதிகளில் உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதில் மத்திய அரசு உறுதியுடன் உள்ளது என்று தெரிவித்துள்ளார்.

இதன் மூலம் அப்பகுதியில் வசிக்கும் மக்களின் வாழ்வாதாரம் மேம்படும் என்றும், போக்குவரத்து நெரிசலைக் குறைக்கும் வகையில் திட்டங்கள் வடிவமைக்கப்பட்டுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

மேலும் இந்த நெடுஞ்சாலைத் திட்டங்கள் போக்குவரத்துக்கான இணைப்பை கணிசமாக மேம்படுதுவதன், பயண நேரத்தை கணிசமாகக் குறைக்கும் என்றும், பிரதமர் அலுவலகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

வெளியுறவுத்துறை செயலர் திரு. விக்ரம் மிஸ்ரி இரண்டு நாள் அரசுமுறைப் பயணமாக இன்று நேபாளம் செல்கிறார்.

இது தொடர்பாக வெளியுறவு அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், அவரது இந்தப் பயணத்தின்போது அந்நாட்டு வெளியுறவு அமைச்சர் திரு. அம்ரித் பகதூர் ராயை சந்தித்து இருதரப்பு உறவுகள் குறித்து பேச்சு நடத்த உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அண்டை நாடுகளுக்கு முன்னுரிமை என்ற கொள்கையின் அடிப்படையில் அந்நாட்டுடனான நட்புறவுக்கு இந்தியா உயர் முன்னுரிமை அளித்து வருவதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெளியுறவு செயலரின் இந்தப் பயணம் இரு நாடுகளுக்கும் இடையேயான நல்லுறவை மேலும் வலுப்படுத்த உதவிடும் என்றும் அந்த அறிக்கை மேலும் தெரிவிக்கிறது.

<<<<>>>>

மணிப்பூர் மாநில ஆளுநர் திரு அஜய் குமார் பல்லா கூடுதலாக நாகாலாந்து மாநில ஆளுநராகவும் பொறுப்பு வகிப்பார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக குடியரசுத்தலைவர் மாளிகை வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் நாகாலாந்து ஆளுநராக பொறுப்பு வகித்த இருந்த இல. கணேசன் மறைவை அடுத்து, திரு. பல்லா அம்மாநில ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

முதல் இந்தியராக சர்வதேச விண்வெளி நிலையத்த்திற்குச் சென்று வரலாறு படைத்த பிறகு, டெல்லி சர்வதேச விமான நிலையம் வந்தடைந்த சுபன்ஷு சுக்லாவுக்கு அன்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.

இன்று அதிகாலை மத்திய இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங், டெல்லி முதலமைச்சர் திருமதி ரேகா குப்தா, இஸ்ரோ தலைவர் டாக்டர் வி. நாராயணன் ஆகியோர் அவரை வரவேற்றனர்.

கடந்த ஜூன் 25 - ம் தேதி புளோரிடாவில் உள்ள கென்னடி விண்வெளி மையத்திலிருந்து சர்வதேச விண்வெளி நிலையத்திற்குச் சென்ற அவர், அங்கு நுண் ஈர்ப்பு விசை சோதனைக்கான அறிவியல் ஆராய்ச்சியை மேற்கொண்ட பின், ஜூலை 15 - ம் தேதி பூமி திரும்பினார்.

இது தொடர்பாக சமூக வலைதள பக்கத்தில் அவர் வெளியிட்டள்ள பதிவில், விண்வெளிப் பயணத்தை வெற்றிகரமாக நிறைவு செய்த பின், நண்பர்கள் மற்றும் குடும்பத்தினருடன் மீண்டும் ஒன்றிணைந்த உற்சாகத்தை நினைவுகூரும் வகையில் தனது அனுபவத்தை பகிர்ந்து கொண்டுள்ளார்.

அடுத்த ஆண்டு இறுதிக்குள் தொடங்கப்பட உள்ள மனிதனை விண்ணுக்கு அனுப்பும் இந்தியாவின் ககன்யான் திட்டத்திற்காக தேர்ந்தெடுக்கப்பட்ட விண்வெளி வீரர்களில் இவரும் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது.

**<<<<>>>>**

தூத்துக்குடி மாவட்டத்தில் தமிழர்களின் தற்காப்புக் கலையான சிலம்பம் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் உலக சாதனை நிகழ்ச்சி நடைபெற்றது.

பாரம்பரிய கலைகளை வளர்த்துக்கொள்வதில் மாணவ-மாணவிகள் இடையே ஆர்வம் அதிகரித்து வருவதாக தற்காப்பு பயிற்சிப் பள்ளி ஒருங்கிணைப்பாளர் தெரிவித்தார்.

(Voice Byte - Varun Kumar - 30 Sec)

**<<<<>>>>**

இந்திய ராணுவத்தின் தெற்கு படைப் பிரிவின் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் தீரஜ் சேத் புதுச்சேரி துணைநிலை ஆளுநர் திரு கே. கைலாஷ்நாதனை சந்தித்துப் பேசினார்.

இந்த சந்திப்பின் போது, மனிதாபிமான உதவிகள், பேரிடர் நிவாரண நடவடிக்கைகளுக்கான தயார்நிலையை மையமாகக் கொண்டு, சிவில் பாதுகாப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறித்து விவாதித்தனர்.

வீரர்களின் நலன், நாட்டைக் கட்டமைப்பதில் அவர்களின் பங்களிப்பு குறித்தும் இதில் விவாதிக்கப்பட்டது.

ராணுவம் நாட்டின் எல்லைப் பகுதிகளை பாதுகாப்பதை முதன்மைப் பணியாகக் கொண்டுள்ள போதிலும், பேரிடர் மீட்பு மற்றும் நிவாரண நடவடிக்கைகளில் மாநில அதிகாரிகள், சிவில் அமைப்புகளுடன் இணைந்து செயல்படுவது குறித்தும் விவாதிக்கப்பட்டது.

<<<<>>>>

அமெரிக்க அதிபர் திரு. டொனால்ட் ட்ரம்ப்புடன் நடத்திய பேச்சுவார்த்தை பயனுள்ளதாக அமைந்தது என்று ரஷ்ய அதிபர் திரு. விளாடிமிர் புதின் தெரிவித்துள்ளார்.

கிரெம்ளின் மாளிகையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் யுக்ரைன் உடனான போரை முடிவுக்குக் கொண்டு வருவது குறித்து விவாதித்ததாக தெரிவித்துள்ளார்.

இந்த விவகாரம் குறித்து அமெரிக்க அதிபரின் முடிவு குறித்தும் இக்கூட்டத்தில் அவர் எடுத்துரைத்தார்.

யுக்ரைன் உடனான போரை விரைவில் முடிவுக்கு கொண்டு வருவது குறித்து விரைவில் முடிவெடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

ரஷ்யா - அமெரிக்கா இடையே இருதரப்பு உறவுகளை மேம்படுத்தும் வகையில் அமெரிக்க அதிபர் திரு. டொனால்ட் ட்ரம்ப் ரஷ்யா வருமாறு அழைப்பு விடுத்துள்ளதாகவும் திரு. புதின் கூறினார்.

**<<<<>>>>**

தெலங்கானா, மகாராஷ்டிரா, குஜராத், கோவா மாநிலங்களின் ஒருசில பகுதிகளில் அதிகனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

குஜராத் மற்றும் தெற்கு விதர்பா பகுதிகளில் இன்று கனமழை பெய்யக்கூடும் என்றும் அந்த மையம் கூறியுள்ளது.

கொங்கன், கோவா, மத்திய மகாராஷ்டிரா பகுதிகளில் அடுத்த 3 நாட்களுக்கு மழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை மையம் தெரிவித்துள்ளது.

கர்நாடகா, தமிழ்நாடு, கேரளா, மாஹே மற்றும் ஆந்திர மாநில கடலோரப் பகுதிகளில் அடுத்த 3 நாட்களுக்கு மழை பெய்யக்கூடும் என்று வானிலை மையம் தெரிவித்துள்ளது.

**<<<<>>>>**

அமெரிக்காவில் நடைபெற்று வரும் சர்வதேச சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ஸ்ரீராம் பாலாஜி - ரித்விக் இணை இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

ஆடவர் இரட்டையர் அரையிறுதி ஆட்டத்தில் இந்த இணை 7-5, 7-6 என்ற செட் கணக்கில் அமெரிக்காவின் வாசின் கிர்க்கோவ் - நெதர்லாந்தின் ஸ்டீவன்ஸ் இணையை வென்றது.

--------------

Saipan சர்வதேச பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் தான்யா ஹேமந்த் பட்டம் வென்றார்.

Northern Mariana-வில் நடைபெற்ற இப்போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவு இறுதியாட்டத்தில் அவர் 15-10, 15-8 என்ற செட் கணக்கில் ஜப்பானின் கனே சகாயை வென்று இப்பட்டத்தைக் கைப்பற்றினார்.

----------------

துரந்த் கோப்பை கால்பந்து போட்டியின் காலிறுதி ஆட்டத்தில் ஜம்ஷெட்புர் அணி இன்று டைமன் ஹார்பர் அணியை எதிர்கொள்கிறது.

ஜம்ஷெட்புரில் இப்போட்டி மாலை 4 மணிக்கு தொடங்குகிறது.

மற்றொரு காலிறுதி ஆட்டத்தில் மோகன் பாகன் அணி - ஈஸ்ட் பெங்கால் அணியை எதிர்கொள்கிறது.

கொல்கத்தாவில் இப்போட்டி இரவு 7:00 மணிக்கு தொடங்குகிறது.

----------------

ஆஸ்திரேலியா ஏ அணிக்கு எதிரான மூன்றாவது மற்றும் இறுதி ஒருநாள் மகளிர் கிரிக்கெட் போட்டியில் இந்தியா ஏ அணி சற்றுமுன் வரை 34 புள்ளி 5 ஓவரில் 4 விக்கெட் இழப்புக்கு 159 ரன் எடுத்துள்ளது.

பிரிஸ்பேனில் நடைபெற்று வரும் இப்போட்டியில் டாஸ்வென்ற இந்தியா ஏ அணி முதலில் பேட் செய்ய தீர்மானித்தது.

-------------

ஸ்வீடனில் நடைபெற்று வரும் சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் Yashaswini Ghorpade பிரதான சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.